**சுவாமி விபுலானந்த அழகியற்கலை கற்கைகள் நிறுவகம்- 2020**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

சுவாமி விபுலானந்த அழகியற்கலை கற்கைகள் நிறுவகத்தின் (''நிறுவகம்'') 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து நிறுவகத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகின்றேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிறுவகம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிறுவகத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை

இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிறுவகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு நிறுவகம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வு நோக்கெல்லை

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நிறுவகத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- நிறுவகத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் நிறுவகம் இணங்கியிருந்ததா என்பதும்,

- நிறுவகம் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- நிறுவகத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு மீதான உள்ளகக் கட்டுப்பாடு

முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அங்கீகாரத்துடன் கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் பொருத்தமான அறிக்கையிடல் நியமங்களிற்கிணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதை அனுமதிப்பதற்கும் சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பை பேணுவதற்கும் தேவையானவாறு கொடுக்கல் வாங்கல்கள் பதிவு செய்யப்படுகின்றன என்றும் முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் மாத்திரமே சொத்துக்களை அணுகுவதற்கு

அனுமதிக்கப்படுகின்றது என்றும் பதிவு செய்யப்பட்ட சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பு ஏற்கனவேயுள்ள சொத்துக்களுடன் நியாயமான கால இடைவெளிகளில் ஒப்பீடு செய்யப்படுகின்றன என்றும் ஏதாவது வேறுபாடுகள் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்றும் நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதற்கு போதுமான உள்ளகக் கணக்கீட்டுக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை ''திட்டமிட்டு பேணுதல்'' நிறுவனங்களிற்கு அவசியமாக உள்ளது.

**1.5.2 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை**

| | உரிய நியமம் தொடர்பாக இணங்காமை | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 07 இன் 65 ஆம் பந்தியின் பிரகாரம் நிலையான சொத்துக்களின் பயன்தரு ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. ரூபா 17,259,976 கிரயமான ஆதனம், பொறி மற்றும் உபகரணம் முழுமையாக பெறுமானத்தேய்விடப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதியளவில் தற்போதும் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 03 இன் பிரகாரம் மதிப்பிடப்பட்ட தவறை சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலையான சொத்துப் பதிவேடு இறுதியாக்கப்பட்ட பின்னர் முழுமையாக பெறுமானத்தேய்விடப்பட்ட சொத்துக்களின் மீள்மதிப்பீடு மேற்கொள்ளப்படும். | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்தை பின்பற்றுதல். |
| (ஆ) | தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையால் 2019 ஆம் ஆண்டில் 5 ஏக்கர் காணி நிறுவகத்திற்கு நன்கொடையாக வழங்கப்பட்டிருந்த போதிலும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 07 இன் பிரகாரம் காணியின் பெறுமதி கணக்குகளிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை. | விலைமதிப்பீட்டுத் திணைக்களத்திடம் குறித்த காணியின் பெறுமதியை மதிப்பீடு செய்வதற்கு ஏற்கனவே கோரப்பட்டிருந்த போதிலும் நன்கொடை என்ற தலைப்பின் கீழ் நிதிக்கூற்றுக்களின் பக்க இல. 9 இல் இது வெளிப்படுத்தப்பட்டுள்ளது. | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்தை பின்பற்றுதல். |
| (இ) | ரூபா 500,220 கூட்டுமொத்தமான கல்விப் பொருட்களின் இருப்பு மீதி மற்றும் 98 நுகரத்தக்க பொருட்களின் பெறுமதி என்பன இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 09 இன் 12 ஆம் பந்தியின் பிரகாரம் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இருப்புக்களிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2021 ஆம் ஆண்டிலிருந்து பராமரிப்பு பிரிவு மற்றும் கட்புல மற்றும் தொழில்நுட்பவியல் கலை பிரிவு என்பவற்றின் அறிக்கைத் திகதியில் உள்ளவாறான நுகரத்தக்கவைகளின் மீதியை கணக்குகளில் சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்தை பின்பற்றுதல். |

### 1.5.3 கணக்கீட்டு குறைபாடுகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2007 தொடக்கம் 2009 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியின் போது பெறப்பட்டு பயன்படுத்தப்பட்ட ரூபா 2,500,000 தொகையான ஏனைய மானியம் காலக்கழிவிடப்பட்டிருக்காததுடன் அத் தொகை நிதிக்கூற்றுக்களில் ஏனைய மானியமாக காட்டப்பட்டிருந்தது. | இவ் விடயத்தை புலனாய்வு செய்வதற்கும் 2021 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் சீராக்கம் செய்வதற்கும் குழுவொன்று நியமனம் செய்யப்படும். | சான்றை கண்டறிந்து அதற்கிணங்க கணக்குப் புத்தகங்களில் சீராக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெறவேண்டியவைகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| கீழே தரப்பட்ட விபரங்களின் பிரகாரம் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்படாமல் 02 தொடக்கம் 08 ஆண்டுகள் வரையான காலவீச்சில் ரூபா 2,950,935 பெற வேண்டியவைகள் நிலுவையாக காணப்பட்டன. | 06 ஊழியர்களிடமிருந்து ரூபா 701,732 மீதியை அவர்களது யூபிஎவ் மீதிகள் அல்லது பிணையாளர்களிடமிருந்து அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். பிணைமுறி மீறியமை தொடர்பாக பெறவேண்டிய ரூபா 2,128,637 தொகையை அறவீடு செய்வதற்கு யூபிஎவ் மீளப்பெறல் விண்ணப்பம் ஏற்கனவே யூஜீசீ இற்கு அனுப்பப்பட்டுள்ளது. அங்கீகாரத்தை பெற்றுக்கொண்ட பின்னர் ரூபா 94,190 பெறவேண்டிய தொகையை பதிவழிப்பதற்கும் இலங்கை கிழக்கு பல்கலைக்கழகத்திடமிருந்து ரூபா 26,735 தொகையை அறவீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். | மேலதிக தாமதமின்றி பெறவேண்டியவைகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.6.2 செலுத்த வேண்டியவைகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| ரூபா 536,942 கூட்டுத்தொகையான செலுத்த வேண்டியவைகள் மற்றும் அட்டுறு செலவினங்கள் தீர்ப்பனவு செய்யப்படாமல் 02 ஆண்டுகளிற்கு மேலாக தீர்ப்பனவு செய்யப்படாதிருந்தன. | ரூபா 495,162 தொகையான செலுத்த வேண்டியவைகள் குறித்த வழங்குநர்களிடமிருந்து கொடுப்பனவு கோரிக்கை கிடைக்கப்பெறாததன் காரணமாக கணக்குப் புத்தகங்களிலிருந்து மீள அனுப்பப்படும். நி.பி. 396 இன் பிரகாரம் ரூபா 10,000 மீதியை சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | செலுத்த வேண்டியவைகள் மற்றும் அட்டுறு செலவினங்களை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட |

ரூபா 6,500 தொகையான வேண்டும். சமர்ப்பிக்கப்படாத காசோலைகளை உள்ளடக்கிய ரூபா 25,280 தொகையான அட்டுறு செலவினங்கள் நி.பி. 571 இன் பிரகாரம் தீர்வை செய்யப்படும்.

**1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணங்கள் | | | |
| (i) நி.பி. 396 | நிறுவகத்தால் வழங்கப்பட்ட ரூபா 38,850 பெறுமதியான பன்னிரண்டு காசோலைகள் 02 தொடக்கம் 04 ஆண்டுகள் வரையான காலவீச்சில் கொடுப்பனவிற்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. எனினும் அச் சமர்ப்பிக்கப்படாத காசோலைகளின் முழுப் பெறுமதியும் இரத்துச் செய்யப்பட்டு நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாமல் பொறுப்புக்களாக காட்டப்பட்டிருந்தன. | நிதிப் பிரமாணம் 396 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். அத்துடன் கணக்குப் புத்தகங்களிலிருந்து தெளிவுபடுத்தப்படும். | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ii) நி.பி. 571 | ரூபா 234,365 தொகையான ஒப்பந்ததாரர்களிடமிருந்தான நிறுத்திவைத்தல் பணம் நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாமல் 5 ஆண்டுகளிற்கு மேலாக காணப்பட்டன. | நி.பி. 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருமானத்திற்கு மாற்றப்படும். | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர் கல்வி நிறுவனங்களின் தாபன விதிக் | அனைத்து பதவியணியினரும் தமது உள்வருகை மற்றும் வெளிச்செல்லல்களை கைவிரல் அடையாளமிடும் இயந்திரத்தில் பதிவுசெய்ய வேண்டிய போதிலும் கல்விசார் பதவியணியினர் | யூஜீசீ இன் கீழுள்ள ஏனைய உயர்கல்வி நிறுவகங்களில் அதே நடைமுறை காணப்படுவதால் கல்விசார் பதவியணி உறுப்பினர்கள் | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | கோவையின் XX ஆம் அத்தியாயத்தின் 3(1) ஆம் பிரிவு மற்றும் 2017 யூலை 10 ஆம் திகதிய 10/2017 ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கை கடிதங்கள் | அவர்களது உள்வருகை மற்றும் வெளிச்செல்லல்களை கைவிரல் அடையாளமிடும் இயந்திரத்தில் பதிவுசெய்வதற்கு மறுத்திருந்ததால் அது தொடர்பாக திருப்திகரமான கட்டுப்பாட்டு முறைமை காணப்படவில்லை. | அவர்களது உள்வருகை/ வெளிச்செல்லலை கைவிரல் அடையாளமிடும் இயந்திரத்தில் பதிவுசெய்வதில்லை. | |
| (இ) | 2013 ஏப்ரல் 10 ஆம் திகதிய 04/2013 ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கை கடிதம் | மீளாய்வாண்டிற்கான வருடாந்த பொருள் மெய்மையாய்வு நடாத்தப்பட்டு அது தொடர்பான அறிக்கை 2021 மார்ச் 17 இல் அல்லது அதற்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பப்பட்டிருக்க வேண்டிய போதிலும் அத்தகைய அறிக்கை கணக்காய்விற்கு நாளது வரையிலும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை . மேலும் நூலக புத்தகங்கள் தொடர்பான மெய்மையாய்வு நிறுவகம் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து மேற்கொள்ளப்பட்டிருக்கவில் லை. | முகாமைத்துவ சபையிடமிருந்து அங்கீகாரம் பெறப்பட்டதும் தங்களுக்கு அனுப்பப்படும். பொருள் மெய்மையாய்வு அறிக்கை 2021 இலிருந்து உரிய காலத்தில் வழங்கப்படும். நூலக புத்தகங்களின் மெய்மையாய்வு 2021 இலிருந்து மேற்கொள்ளப்படும். | அறிக்கையை சமர்ப்பிப்பதற்கு சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 1,694,493 தொகையான மிகையொன்றாக காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 23,344,485 தொகையாக காணப்பட்டமையால் நிதி விளைவுகளில் ரூபா 25,038,978 தொகையான முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. அரசாங்க மானியம் மற்றும் ஏனைய வருமானங்கள் ரூபா 20,943,860 ஆல் அதிகரித்தமை இம் முன்னேற்றத்திற்கான காரணங்களாக உள்ளதுடன் ஏனைய செயற்பாட்டுச் செலவினங்கள், ஒப்பந்த சேவை மற்றும் வழங்கல்கள் மற்றும் நுகரத்தக்க செலவினங்கள் ரூபா 12,769,144 ஆல் குறைவடைந்தமை இம் முன்னேற்றத்திற்குப் பிரதானமாக பங்களித்திருந்தது.

### 2.2 விகிதப் பகுப்பாய்வு

மீளாய்வாண்டின் போது நடைமுறை சொத்து விகிதம் மற்றும் விரைவு விகிதம் என்பன முறையே 1.58 மற்றும் 1.43 ஆக வெளிப்படுத்தப்பட்டிருந்ததுடன் செலுத்த வேண்டிய மஹாபொல/ உதவிப்பணம் மற்றும் அட்டுறு செலவினங்கள் முறையே ரூபா 2,020,000

மற்றும் ரூபா 2,075,604 ஆல் குறைவடைந்திருந்திருந்ததன் விளைவாக முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 0.04 ஆல் நடைமுறை சொத்து விகிதம் அதிகரித்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 நிதிகளின் குறைப்பயன்பாடு

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2016 ஆம் ஆண்டிலிருந்து குறித்த ஆண்டுகளில் ஆராய்ச்சிகளை சமர்ப்பித்திருக்காத 23 பதவியணியினரிற்கு ஆராய்ச்சி படிகளாக ரூபா 3,885,993 நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் நிதியேற்பாடானது ஆராய்ச்சி செயன்முன்னேற்றத்திற்காக பயன்படுத்தப்படாமல் விளைவற்றிருந்தது. | 2016 ஆம் ஆண்டிலிருந்து அவை நிலுவையாக காணப்படுவதாலும் ஆராய்ச்சி படிகளிற்கு உரித்துள்ள உரிய கல்விசார் பதவியணியினரிடமிருந்து கோரிக்கைகள் கிடைத்திருக்காததாலும் கணக்குகளில் விளைவற்றிருக்கின்ற இந் நிதியேற்பாடுகளை மீள அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | உரிய நோக்கங்களிற்கு நிதியேற்பாடுகளை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.2 மனித வளங்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு நிறுவகத்தின் கல்விசார் பதவியணியினர்களின் 13 வெற்றிடங்களும் கல்விசாரா பதவியணியினர்களின் 44 வெற்றிடங்களும் இவ் அறிக்கைத் திகதி வரை நிரப்பப்பட்டிருக்கவில்லை. | 13 கல்விசார் பதவியணி வெற்றிடங்களில் 06 தற்காலிக உதவி விரிவுரையாளர் மற்றும் 05 கல்விசார் பதவியணியினர் 2020 நவம்பர் மாதத்தில் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்ததுடன் 05 கல்விசார் பதவியணி பதவிகளை நிரப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. கல்விசாரா பதவிகளின் 44 வெற்றிடங்களை நிரப்புவது தொடர்பாக 2021 சனவரியில் அமைச்சிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட புதிய பெயர் பட்டியலொன்று பரீட்சையை நடாத்துவதற்கு போதுமான பொருத்தமான விண்ணப்பதாரிகளை கொண்டிருக்காததுடன் அமைச்சிற்கு மீண்டும் கோரிக்கையொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது. | வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2019 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் 11 புதிய பட்ட மற்றும் பட்டப்பின் படிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட வேண்டியிருந்த போதிலும் 2021 ஏப்ரல் 15 வரையிலும் நிறுவகத்தால் புதிய பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் எதுவும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | நிறுவகத்தின் செயல்நடவடிக்கைத் திட்டம் மற்றும் தந்திரோபாய திட்டம் என்பன காலத் தேவைக்கேற்ப திருத்தம் செய்யப்படும். | புதிய பட்டப்பின் படிப்பு நிகழ்ச்சித்திட்டங்களை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் ஐந்து இலக்குகளின் கீழ் 90 செயற்பாடுகள் அமுல்ப்படுத்தப்படுவதற்கு திட்டமிடப்பட்ட போதிலும் செயற்பாடுகளின் 60 சதவீதம் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. 12 செயற்பாடுகளின் செயன்முன்னேற்றம் 50 சதவீதமாக குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. | கொவிட் 19 தொற்றுநோய் காரணமாக செயல்நடவடிக்கைத் திட்டத்தில் தேவையான செயன்முன்னேற்றத்தை அடைந்துகொள்ள முடியாதிருந்தது. எனினும் 2021 இலிருந்து செயல்நடவடிக்கைத் திட்டத்தின் செயன்முன்னேற்றத்தை காலாண்டு ரீதியாக மீளாய்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | செயற்பாடுகளை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 4.2 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்திக்கான ஐக்கிய நாடுகளின் ''2030 ஆம் ஆண்டு நிகழ்ச்சி நிரல்'' மற்றும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சின் செயலாளரால் வழங்கப்பட்ட நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான 2017 ஆகஸ்ட் 14 ஆம் திகதிய என்பி/எஸ்பி/எஸ்டிஜீ/17 ஆம் இலக்க சுற்றறிக்கை என்பவற்றின் பிரகாரம் ஒவ்வொரு அரசாங்க நிறுவனமும் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டிய போதிலும் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளையும் அவ் இலக்குகளை அளவீடு செய்வதற்கான குறிகாட்டிகளையும் இனங்காண்பதற்கு நிறுவகத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஆண்டறிக்கையில் ''நிலைபேறான அபிவிருத்தி எண்ணக்கரு'' ஏற்கனவே இனங்காணப்பட்டிருந்த போதிலும் நிறுவகத்தின் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் மற்றும் தந்திரோபாய திட்டம் என்பவற்றில் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |